# DATAH

Digital Archive Tamil Agrarian History 1650-1950

## Working Paper

**2018 - 3**

# Slavery in Tamil Palm leaf Manuscripts

V. Muthukumar

UMIFRE 21 CNRS-MAEE

The Endangered Archives Programme
Supported by Arcadia

DATAH Working Paper Series

This series is published by the “Caste, Land and Custom (CLAC): Digital Archive of Tamil Agrarian History 1650-1950 (DATAH)” project. This project aims to create a digital archive of documents of socio-historical relevance to historians, anthropologists, sociologists and linguists. These documents, recorded on paper, palm-leaves and copper plates provide a rare and unique opportunity to glimpse a variety of aspects of social history of village life in the more remote parts of the Tamil region at a time when new power structures and social identities were being forged both with and against local traditional feudal systems and British colonial legislations. This project brings together two initiatives funded primarily by the Endangered Archives Programme, British Library and ARCADIA and hosted by the French Institute of Pondicherry.

Caste, Land and Custom (CLAC),
**Centre d'Études de l'Inde et de l'Asie du Sud**
UMR8564 - CNRS / EHESS,
54 boulevard Raspail, 75006 Paris, France
Tél. : +33 (0)1 49 54 83 94
https://clac.hypotheses.org/

# Slavery in Tamil Palm leaf Manuscripts

**V. Muthukumar**

**Central Archaeological Department, Delhi**

**This version February 2018**

**Abstract**

பண்டைய தமிழகத்தில் அடிமை முறை இருந்தது என்பதை இலக்கியங்கள், கல்வெட்டுக்கள், ஓலை மற்றும் காகித ஆவணங்கள், செப்புப்பட்டயங்கள், வெளிநாட்டவர் குறிப்புகள், கிறிதவ மிஷனரிகளின் கடிதங்கள் மற்றும் குறிப்புகள், அரசு ஆவணங்கள் ஆகியவற்றில் கிடைக்கும் செய்திகளைக் கொண்டு உறுதிசெய்யலாம். ஆனால் சில வருடங்களுக்கு முந்தைய ஒருசில வரலாற்று ஆய்வாலர்கள் அடிமை முறை பழந்தமிழகத்தில் இல்லை என்றும் அவர்கள் உயர் நாகரீகத்தில் வாழ்ந்தார்கள் என்றும் வி. கனகசபை மற்றும் இ.ராமகிருஷ்ணன் போன்றோர் தத்தமது நூல்களில் தெரிவிக்கின்றனர். ஆனால் நமக்குக் கிடைக்கக்கூடிய சான்றுகள் அவற்றிற்கு மாறுபட்ட கருத்தை கூறுவதாக உள்ளது.

*Keywords: Slavery, Archival materials, Temple accounts, Endangered Archival Programme*

# தமிழ் ஓலை ஆவணங்களில் அடிமை முறை

வீ. முத்துக்குமார்
மத்திய தொல்லியல் துறை
தில்லி.

பண்டைய தமிழகத்தில் அடிமை முறை இருந்தது என்பதை இலக்கியங்கள், கல்வெட்டுக்கள், ஓலை மற்றும் காகித ஆவணங்கள், செப்புப்பட்டயங்கள், வெளிநாட்டவர் குறிப்புகள், கிறிதவ மிஷினரிகளின் கடிதங்கள் மற்றும் குறிப்புகள், அரசு ஆவணங்கள் ஆகியவற்றில் கிடைக்கும் செய்திகளைக் கொண்டு உறுதிசெய்யலாம். ஆனால் சில வருடங்களுக்கு முந்தைய ஒருசில வரலாற்று ஆய்வாலர்கள் அடிமை முறை பழந்தமிழகத்தில் இல்லை என்றும் அவர்கள் உயர் நாகரீகத்தில் வாழ்ந்தார்கள் என்றும் வி. கனகசபை மற்றும் இ.ராமகிருஷ்ணன் போன்றோர் தத்தமது நூல்களில் தெரிவிக்கின்றனர். ஆனால் நமக்குக் கிடைக்கக்கூடிய சான்றுகள் அவற்றிற்கு மாறுபட்ட கருத்தை கூறுவதாக உள்ளது. தொல்காப்பியத்தில் அடிமை என்பதற்கு ஓஅடியோர்’ என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதற்கு உரை எழுதிய உரையாசிரியர் இளம்பூரனர் ஓஅடித் தொழில் செய்வார்’ என பொருள் உரைக்கிறார். அதே போன்று பிற்கால இலக்கியங்கள் மற்றும் கல்வெட்டுக்களில் நாயன்மார்கள் மற்றும் ஆழ்வார்கள் அடியார் என்ற பொருளில் பயன்படுத்தியுள்ளனர். இவர்கள் இறைவனின் அடிமைகள் என்ற பொருள்கொண்டதாக அமைகிறது.

சங்ககாலம் தொட்டு பல்லவர் காலம் வரை இலக்கியங்களிலேயே அடிமைகள் பற்றிய செய்திகள் கிடைக்கின்றன. இவற்றில் பல்லவர் காலத்தைச் சேர்ந்த இலக்கியங்களான பதினென்கீழ் கணக்கு நூல்கள் மற்றும் பக்தி இலக்கியங்கள் மறைமுகமாகவும் வெளிப்படையாகவும் அடிமை முறை பற்றி தெரிவிக்கின்றன. நூலடியாரில் பெண் அடிமைகள்

ஓதொழுத்தைமார்’ எனப்பட்டனர். ஆளோலை என்ற சொல்லை சோழர் காலத்தில் சேக்கிழார் பயன்படுத்தியுள்ளார். ஆளோலை என்பது ஆட்களை விற்பதற்கான ஓலை ஆவணம் என்ற பொருளில் அமைகிறது. ஆளோலை என்ற சொல் 13ம் நூற்றாண்டில் கல்வெட்டில் காணப்படுகிறது. அதே பொருளில் சோழர்காலத்தில் கல்வெட்டுக்களில் ஆள்விலைப்பிரமாண இசைவுத் தீட்டு’ என்ற சொல்லாட்சி இடம்பெற்றுள்ளது. சோழர்காலத்தில் கல்வெட்டுக்களில் பெரும்பாலும் கோயில் அடிமைகள் பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன. ஆனால் வீட்டடிமைகள் பற்றிய செய்திகள் மிக குறைவானவையே. ஆயினும் இலக்கியங்களின் வாயிலாக வீட்டடிமைகளைப் பற்றி அறிய முடிகிறது. பெரியபுராணத்தில் சுந்தரர் அடிமை என்று கூறி அந்தனர் வேடத்தில் வந்த சிவபெருமான் சுந்தரரை தனது அடிமை என்றும் அதற்கான ஆள் ஓலை’ தன்னிடம் உள்ளதாக கூறி ஆவணத்தைக் காண்பித்தார். ஆனால் அதனை சுந்தரர் ஏற்காமல் கழித்தெரிந்தார். ஆனால் சிவ பெருமானோ சுந்தரர் கழித்தெரிந்த ஓலை அவனது பாட்டனார் எழுதிக்கொடுத்த ஓஆளோலை’யின் படி ஓலைதான் என்றும் தன்னிடம் மூலவோலை இருப்பதாகக் கூறி மூலவோலையை அந்தணர்களிடம் காண்பித்தார். அதனை படித்துபார்த்த அந்தணர்கள் சாட்சி கையொப்பங்களை சரிபார்த்து அந்தணர் உருவில் வந்த சிவபெருமானோடு அனுப்பிவைத்தனர். இதன் மூலமாக சில செய்தியை நாம் அறிந்துகொள்ள முடிகிறது.

–அந்தணர்கள் அடிமையாகும் வழக்கமில்லை.

– சோழர்காலத்தில் அடிமையாவோருக்கு ஓலை எழுதிக்கொடுத்தனர்

–தன்னை மட்டுமின்றி தன் வழியில் வரும் தனது பரம்பரையினரையும் அடிமைகலாக எழுதிக்கொடுக்கும் பழக்கம் இருந்துள்ளது.

– அடிமை தனது உடன்படிக்கையில் தவரினால் ஊர் சபையில் முறையிடலாம்.

–சாட்சிகளாக பலர் கையொப்பமிட்டனர்

–அடிமை ஓலை இருப்பின் அடிமை அவனது பணியில் தவறும்பொழுது மீண்டும் அதன் மீதுள்ள உரிமையை பெறமுடியும் என்ற செய்திகளை அறியமுடிகிறது.

மேலும் அடிமைகள் சீதனமாக தனது மகன் திருமணம் செய்து செல்லும் வீட்டிற்று அடிமை உரிமையாளர்களால் மற்ற பெருட்களைப் போல் அனுப்பிவைக்கப்பட்டனர். மேலும் அடிமையில் உரிமையாளர் இறந்துவிட்ட நிலையில் இறந்தவரின் மனைவி மற்றும் மக்களுக்கு அடிமையாக இருக்க வேண்டும் என்ற செய்தியை இரண்டாம் இராஜாதிராஜனின் 17ம் ஆட்சியாண்டில் சீர்காழிக்கு அருகில் உள்ள ஆச்சால்புறம் என்ற ஊரில் உள்ள கல்வெட்டின் வாயிலாக அறியமுடிகிறது. மேலும் நிலம் விற்கும்பொழுது அவற்றுடன் அடிமைகளும் விற்கப்பட்டனர்.

அடிமைகள் பொதுவாக கோயில் பெண் அடிமைகள் தேவரடியாராக இருந்து கோயில் வேலைகளை செய்து வந்தனர். அவற்றில் கவரி வீசுதல், திருப்பதிகம் பாடுதல், தூய்மை செய்தல், கோயிலின் மற்ற பிற வேலைகளான நெல் குத்துதல், பாத்திரம் துளக்குதல், விளக்கேற்றுதல் போன்ற வேலைகளையும் செய்து வந்தனர். ஆண் அடிமைகள் நந்தவனம் அமைத்தல் கோயில் ஆடு மாடுகளை மேய்த்தல் போன்ற பணிகளை செய்துவந்தனர். அவ்வாராக செய்துவரும் வேலையிலிருந்து ஓடி ஒழிந்துபோனால் மற்றும் பணியை முறையாக நிறைவேற்றாத அடிமைகளுக்கு தண்டணை வழங்கப்பட்டது. அவ்வாறு மூன்றாம் குலோத்துங்கன் ஆணையிட்டதாக திருவாலங்காட்டு கல்வெட்டு கோயில் அடிமைகளுக்கு தண்டணை வழங்கிய செய்தியை தெரிவிக்கிறது.

13ம் நூற்றாண்டில் தமிழகத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட இபான்–பத்துதா என்ற ஆப்பிரிக்க முஸ்லீம் பயணியின் குறிப்பில்

அடிமை வாணிகம் தமிழகத்தில் இருந்தது என்பதை தெரிவிக்கிறது. மாலத்தீவில் சோழ மண்டலத்தைச் சேர்ந்த பெண் ஒருத்தியை அந்நாட்டு மன்னன் அன்பளிப்பாக வழங்கிய செய்தியை குறிப்பிடுகிறார். மேலும் அவர் ஒரு அடிமைப் பெண்ணை மதுரையில் விலைக்கு வாங்கியதாகவும் குறிப்பிடுகிறார்.

அதனைப் போன்று மராட்டிய மன்னர்களின் காலத்தில் ஏராலமான பெண்கள் அடிமைகளாக அரண்மணைக்கு வாங்கப்பட்டதாகவும் அடிமைகளாக விற்றவர்கள் படிப்பறிவில்லாதவர்கள் மட்டுமின்றி படித்த அரசுப் பணியில் இருந்த சிலரின் குடும்ப பெண்களும் அவர்களுக்குத் தெரியாமலேயே திருட்டுத்தனமாக விற்கப்பட்ட செய்தியும் பின்னர் பெண்களின் உரிமையாளர்கள் அதுதொடர்பாக அரசு மேல் அதிகாரிகளுக்கு விண்ணப்பம் செய்த செய்திகளும் கிடைக்கின்றன.

நாயக்கர் மற்றும் ஆங்கிலேயரின் ஆட்சிக்காலத்தில் ஏராலமான அடிமைகள் விற்க்கப்பட்டன. இக்கால கட்டத்தைச் சேர்ந்த ஆள் விலை ஆவணங்கள் ஓலைகளில் நுயீ458 ிசழதநஉவ மூலமாக அதிக அளவில் சேகரிக்கப்பட்டுள்ளன.

கோயில் அடிமைகளைப் பொருத்தவரை மன்னரைத் தவிர மற்ற அனைவருமே அடிமைகளாகக் கருதப்பட்டனர். இக்காலகட்டத்தில் உள்ளூர் மட்டுமின்றி வெளி நாடுகளுக்கும் ஆட்களை விற்ற செய்தி குறிப்பிடப்படுகிறது. ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் அடிமை முறை இருந்ததற்கு ஆதாரமாக கிழக்கிந்திய கம்பெனியின் சென்னை ரெவின்யூ போர்டுக்கு அனுப்பிய அறிக்கைகளிலும், ஆங்கில அதிகாரிகளுக்கு உதவும் வகையில் தயாரிக்கப்பட்ட விவரச் சுவடிகளும் அமைகின்றன.

கொத்தடிமைகளாகவும், பண்ணையாட்களாகவும், படியாள்களாகவும் கிராமப்புறங்களில் வாழ்ந்துவந்த அடிமைகள் பிற கடல்கடந்த நாடுகளுக்கும் தோட்ட வேலை செய்வதற்கும், பிற தொழிற்சாலைகளில் வேலைகள் செய்வதற்கும் விற்கப்பட்டனர். மேலும் ஆங்கிலேயரின் ஆட்சிக்காலத்தில் வருமானத்தைப்

பெருக்க விளை நிலங்களில் தொடர்ச்சியாக விவசாயம் செய்யவும் விவசாயம் சார்ந்த பணிகளைச் செய்யவும் அடிமைகளை வைத்துக்கொள்ள நில உடமையாளர்கள் அறிவுறுத்தப்பட்டனர்.

ஆங்கிலேயரின் இறுதி கால கட்டத்தில் அடிமைகள் ஒழிப்பு முறை கொண்டு வரவேண்டும் என சில அதிகாரிகள் வர்ப்புருத்திய பொழுது தனது வருமானம் பாதிக்கப்படுவதோடு சமுதாயத்தில் பல பிரச்சனைகள் எழும் நிலை ஏற்படும் என்று பலமுறை தவிர்த்து வந்த நிலையில் மேலை நாடுகளில் ஏற்பட்ட அடிமை ஒழிப்பு புரட்சியின் காரணமாக இந்தியாவிலும் அடிமை ஒழிப்புச் சட்டம் 1843 ல் கொண்டுவரப்பட்டது. இது அடிமைகளின் சுதந்திரம் மற்றும் அவர்களின் வாழ்வாதாரத்திற்கு உதவும் சட்டமாக அமைந்தது.

EAP458 project மூலமாக நாம் சேகரித்த ஆவணங்கள் 1650 முதல் 1950 வரையிலான வரலாறு மற்றும் மக்களின் நடைமுறை வழக்கங்கள் பற்றிய அறிய செய்திகளை எடுத்துக் கூறுகின்றன. இந்த ஆவணங்கள் சேகரிப்பு பணியானது தமிழகத்தின் பல மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டது. மதுரை, தேனி, திடுண்டுக்கல், சிவகங்கை, ஈரோடு, தர்மபுரி, நாமக்கல், சேலம், கோயம்புத்தூர் போன்ற மாவட்டங்களில் உள்ள ஜமின்தார்கள், நிலஉடமையாளர்கள் பாமர மக்கள், அக்காலத்தில் அரசு அதிகாரிகள், கல்வி நிறுவனங்கள், மடங்கள் போன்றவற்றில் அவர்களாலும் அவர்களின் முன்னோர்களாலும் காலங்காலமாக பாதுகாத்து வைக்கப்பட்ட ஓலை, செப்பேடு மற்றும் காகிகத ஆவணங்கள் புகைப்படம் எடுத்து சேகரிக்கப்பட்டன.

இவ்வாவணங்கள் தமிழகத்தின் 1650 முதல் 1950 காலகட்டத்தில் நிகழ்ந்த வரலாற்று நிகழ்வுகள், அரசு ஒப்பந்தங்கள், ஜமின்தார்கள் மற்றும் பாமர மக்களுக்கு இடையிலான ஒப்பந்தங்கள், அரசு ஆணைகள், நிலம் விற்றல்

வாங்கள், கடன் பத்திரங்கள், நீர் மேலாண்மை தொடர்பான செய்திகள் அவற்றில் ஏற்பட்ட பிரச்சினைகள் அவற்றை சரிசெய்ய மேற்கொண்ட சீர்திருத்த ஒப்பந்தங்கள் மனிதன் மனிதனை விலைக்கு வாங்குதல் மற்றும் விற்றல் தொடர்பான அடிமை ஆவணங்கள், ஒரு கிராமத்தை உருவாக்கும் பொழுது கிராமத்திற்குபணி செய்ய அந்தந்த பணி செய்யும் சாதியினரை குடியமர்த்த மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள், ஊரில் அல்லது குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் வகையில் வழங்கப்பட்ட தீர்ப்புகள் என பலதரப்பட்ட வரலாற்று நிகழ்வுகளைத் தாங்கி நிற்கும் ஒரு ஆவணக்காப்பகமாக அமைந்துள்ளது.

அவற்றில் ஓலை ஆவணங்களில் கிடைத்த அடிமை முறை பற்றி விரிவாக காண்போம். நமக்கு அடிமைகள் பற்றிய 42 ஓலை ஆவணங்கள் கிடைத்துள்ளன. அவை திருமலை நாயக்கர் மன்னரின் காலத்திலிருந்து கிட்டத்தட்ட இந்தியா சுதந்திரம் அடைவதற்கு 30 ஆண்டுகளுக்கு முன்பு வரை அடிமை முறை தமிழகத்தில் நிலவியதற்கு ஆதாரமாக அமைகிறது.

மதுரை மாவட்டம் வெள்ளியங்குன்றம் மற்றும் அதலை ஆகிய கிராமங்களில் கிடைத்த அடிமை ஆவணங்கள் குறிப்பிடத்தக்கது. இவ்வோலை அடிமை ஆவணங்கள் பெரும்பாலும் வாங்கள் மற்றும் விற்றல் தொடர்பான செய்திகள் கொண்டதாக அதிக அளவில் காணப்படுகின்றன. பொதுவாக இவ்வோலைகள் 46 செ.மீ. நிளம் தொடங்கி 24 செ.மீ. நீளம் வரையிலும் , 5 செ.மீ. அகலம் தொடங்கி 3 செ.மீ. அகலம் வரையிலும் கிடைத்துள்ளன. இவ்வோலைகள் பெரும்பாலும் இருபுறமும் எழுதப்பட்ட நிலையில் 8 முதல் 14 வரிகளைக் கொண்டுள்ளன.

அடிமை ஓலை ஆவணங்களைப் பொருத்தவரை அடிமை முறி, அடிமை சாதனம், அடிமை விலைக்கிரயம், அடிமை உடன்படிக்கை மற்றும் அறுதிக்கிரைய சாதனமுறி போன்ற பெயர்களில் எழுதப்பட்டுள்ளன. இவை அடிமைகளை வாங்குதல்

மற்றும் விற்றல் தொடர்பான செய்திகளை தெரிவிக்கின்றன. உடன்படிக்கைச் சீட்டு, ஒத்திமுறி போன்றவை சில குறிப்பிட்ட காலத்திற்கு அடிமையாக அனுப்பிவித்துக் கொள்ள மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கைகள் பற்றியும் தெரிவிக்கின்றன.

பிணைமுறி, பிணைமுறி சாதனம் போன்றவை வாங்குபவருக்கு விற்பவரின் சார்பாக நான்காம் நபர் எழுதிக்கொடுக்கும் பினை உடன்படிக்கை. அதாவது இந்த அடிமை ஓடி ஒழிந்துபோனால் அவரை நானே தேடி ஒப்படைப்பேன் என்ற உறுதிமொழி கூறப்பட்டுவது.

இவ்வனைத்து ஓலை ஆவணங்களிலும் சில பொதுவான வழிமுறைகள் பின்பற்றியுள்ளனர். பொதுவாக அடிமை ஆவணங்களில் தமிழ் வருடங்களான 60 வருடங்களில் ஒன்று, தமிழ் மாதம், தேதி போன்றவை ஓலை எழுதுவதின் தொடக்கத்தில் குறிப்பிடப்படுவது வழக்கமாக கொண்டுள்ளன. இவற்றில் சில நாயக்கர் காலத்ததை சார்ந்தவையாகும். இவை மன்னனின் மெய்க்கீர்த்தியுடன் தொடங்கி சக ஆண்டு மற்றும் தமிழ் ஆண்டு, மாதம் மற்றும் தேதி குறிப்பிடப்பட்டிருக்கிறது.

பிறகு அடிமையை வாங்குபவர் அவரின் ஊர், தந்தையின் பெயர், சாதி, மற்றும் விற்பவரின் பெயர், ஊரின் பெயர், தந்தையின் பெயர் மற்றும் சாதி ஆகிய விவரங்களை கொண்டுள்ளன. இதில் வாங்குபவர்கள் அனைவரும் ஊரில் உயர் குடியாக கருதப்பட்டவர்களாகவும் நில உடமையாளர்களாகவும் திகழ்ந்தனர். இவர்கள் கவுண்டர், கள்ளர் மற்றும் அகம்படிய சாதிகளை சேர்ந்தவர்களாக விளங்கினர். ஆடிமைகளாக விற்கப்படுபவர் சமுதாயத்தில் பொருளாதார ரீதியில் பின்தங்கிய நிலங்களற்றவர்களாகவும் படிப்பறிவு இல்லாதவர்களாகவும் விளங்கினர். இவர்கள் பெரும்பாலும் பறையர், பள்ளர் மற்றும் வலையர் போன்ற சாதியினர்களாக குறிப்பிடப்பட்டுள்ளது.

பெரும்பாலான ஓலைகளில் அடிமையாக விற்கப்படுபவர் விற்பவரின் தம்பி, தம்பி மக்கள், தனது மகன் மற்றும் மகள் போன்றோர்களாக குறிப்பிடப்படுகின்றன. அடிமைகளாக விற்கப்படுபவரின் வயது பற்றிய செய்திகள் கிடைக்கவில்லை. அடிமைகள் விற்பவரின் அவசர பணத்தேவை காரணமாகவே விற்கப்பட்டனர் என்ற செய்தி குறிப்பிடப்படுகிறது. வாங்கப்படும் அடிமைகள் தனது பண்ணை மற்றும் வீட்டு வேலைகள், மாடு ஆடுகளை பராமரித்தல் போன்ற வேலைகளைச் செய்வதில் முழு அக்கரையுடன் செயல்பட வேண்டும் என்றும் தான் விரும்பும் வேலைகளை செய்ய வேண்டும் என வாங்குபவர்கள் உத்தரவாதம் பெற்ற பின்னரே வாங்கினர்.

பெரும்பாலும் அடிமைகள் பணத்திற்காகவே விற்கப்பட்டனர். மதுரை பகுதியில் புழக்கத்திலிருந்த கலியுகராமன் புதுமின்னல் என்னும் பணத்தை கொடுத்து வாங்கும் பழக்கம் இருந்துள்ளது. பணம் 9 முதல் 38 வரையிலான மதிப்பில் வாங்கப்பட்டனர். இதில் ஒருவரையோ அல்லது ஒரு குடும்பத்தின் நபர்களையோ மொத்தமாக வாங்கினர்.

இந்த விற்பனை ஓலையை எழுதுவதற்காக சில அனுபவமுள்ளவர்களிடம் பணம் ஒன்று கொடுத்து எழுதப்பட்டுள்ளது. பணம் ஒன்று என்பது ஒரு அடிமைக்கான விற்பனையின் ஓலைக்கு பெறப்பட்டது. அதே நேரத்தில் ஒரு குடும்பமாக 4 பேர் விற்கப்படும் பொழுது ஒரே ஓலை ஆவணமாக இருந்தாலும் ஒரு அடிமைக்கு பணம் ஒன்று வீதம் பணம் நான்கு விற்பனைத் தொகையிலிருந்து கழித்துக்கொண்டு மீதப்பணத்தை விற்றவருக்கு வழங்கப்பட்டது. இதன் மூலமாக ஓலை எழுதுவதற்கு விற்பவரே எழுத்துக்கூலி கொடுக்கும் பழக்கம் இருந்துள்ளதை அறிய முடிகின்றது. ஓலை எழுதுபவர் பரம்பரையாக எழுதுபவராகவோ அல்லது நாட்டுக் கணக்கு மற்றும் கோயில் கணக்கு போன்ற அதிகாரிகளாகவோ இருந்துள்ளனர்.

விற்கப்பட்ட அடிமைகள் சந்திரன் சூரியன் உள்ளவரை அடிமை வாங்கியவர் சொல்லும் வேலைகளைச் செய்தல், அவர்கள் வழங்கும் உணவு உடைகளை ஏற்றுக்கொண்டு தனது உறவுகளை மறந்து அடிமையின் வாழ்நாள் முழுவதும் தனது எஜமான் சொல்லை செயலாக மாற்றும் மனித மனித விலங்குகளாக வாழ்ந்து வந்தனர். மேலும் அடிமையை வாங்கியவர் மற்றவர்களுக்கு விற்கும் உரிமையும் தனது மகன் மகளுக்கு சீதனமாக வழங்கும் உரிமையும் உடையவர்களாக விளங்கினர்.

அடிமைகள் வேலை செய்வதில் முரன்பிடித்தாலோ அல்லது ஓடி ஒழிந்துகொண்டாலோ அவர்களை தேடி கொண்டுவந்து உரிமையாளரிடம் ஒப்படைக்கும் பொறுப்பு அடிமையை விற்றவருக்கும் பிணைக் கையொப்பம் இட்டவருக்கும் உள்ளது. அப்படி ஒப்படைப்பதில் தாமதம் ஏற்பட்டால் ஒப்படைக்கும் வரை உரிமையாளரின் வேலைகளை இவர்கள் செய்யவேண்டிய கட்டாயத்தில் தள்ளப்படுவார்கள்.

சில ஓலைகள் ஒத்தியாக சில வருடங்களுக்கு வேலை செய்ய பணம் வாங்கியவர்களிடம் ஒப்படைப்பதும் உண்டு. அப்பொழுது அடிமையின் உறவினர்களில் ஒருவர் குறிப்பிட்ட ரொக்கத்தை ஒத்தியாக வாங்குபவரிடம் பெற்றுக்கொண்டு குறிப்பிட்ட காலத்திற்குள் பணத்தை திரும்ப செலுத்தி அடிமையை திரும்ப பெற்றுக்கொள்ளவேண்டும் அவ்வாறு பெற்றுக்கொள்ளாதவரையில் அடிமையாள் வேலை செய்துகொண்டே இருக்கவேண்டும். ஒருவேலை அடிமையை குறிப்பிட்ட காலத்திற்கு முன்பாக திரும்பப் பெறவேண்டும் எனில் வாங்கிய தொகையைவிட மூன்று மடங்கு அடிமையை திருப்பித் தருபவரிடம் கொடுக்கவேண்டும்.

இதற்கு சாட்சியாக விற்பவரின் உறவினர்கள் ஊர் பொதுவானவர்கள் விற்பவர் மற்றும் அடிமையாக விற்கப்படுபவர் ஆகியோரின் கையொப்பமிடப்பட்டுள்ளது. பெரும்பாலும் விற்பவர் மற்றும் விற்கப்படுபவரின் கையொப்பத்திற்கு பதிலாக ஒரு கோடு இட்டு அதன் அருகில் தற்குறி என்று எழுதப்பட்டிருக்கும். இதன்

மூலமாக இவர்கள் எழுதப்படிக்கத் தெரியாதவர்களாகவே இருந்துள்ளனர் என்பது தெளிவாக தெரிகிறது.

தமிழகத்தில் அடிமை முறை என்பது விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பு ஆகிய இரண்டிற்று மட்டுமே அதிக அளவில் அடிமைகள் பயன்படுத்தப்பட்டனர். இவர்கள் நிலத்தின் மூலமாக கிடைக்கக் கூடிய விளைச்சல் மற்றும் ஆடு, மாடுகள் பராமரித்தது அதன் மூலம் கிடைகக் கூடிய வருமானம் ஆகியவற்றிற்காகவே அடிமைகள் வாங்கப்பட்டனர். மேலை நாடுகளைப் போன்று தொழிற்சாலைகள் அமைத்து அதன் மூலமாக கிடைக்கக் கூடிய பொருட்களை உள்நாட்டிலும் பிறவெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்காகவும் அடிமைகளை வைத்துக்கொள்ளவில்லை. நேரடியாக எந்தவொரு அடிமையின் வாழ்க்கை முறையைப் பற்றிய செய்திகள் கிடைக்கவில்லை. இருப்பினும் சந்திரதித்தவரை, சந்திராதித்தர் உள்ளவரை பரம்பரைபரம்பரையாக, வழிஅடிமை, அவர்களையும் அவர்கள் வர்க்கத்தாரையும் போன்ற சொற்கள் குறிப்பிடப்பட்டுள்ளதின் மூலமாக அவர்கள் மீளா அடிமைகளாக சாகும் வரை அடிமைகளாக வாழ்ந்தனர் என்பதை ஓலை ஆவணங்கள் மூலமாக அறிந்துகொள்ள முடிகிறது.